செய்தி வெளியீடு எண்: 896 நாள்:13.10.2010

## தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் அரசு மருத்துவமனை, அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் மேலும் 1,198 மருத்துவப் பணியாளர்கள் நியமனம்!

## முதலமைச்சர் கலைஞர் பணி நியமன ஆணைகளை வழங்கினார்!

2006இல் இந்த அரசு பொறுப்பேற்றபின் அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் சிகிச்சைக்காக வரும் நோயாளிகளுக்குத் தரமான மருத்துவ வசதிகள் அளிக்கப்பட வேண்டும் என்பதற்காக, அரசு மருத்துவமனைகளில் காலியாக இருக்கும் மருத்துவர் பணியிடங்கள், செவிலியர்கள், மருந்தாளுநர்கள், ஆய்வகத் தொழில் நுட்பப் பணியாளர்கள் போன்ற மருத்துவம் சார்ந்த பணியிடங்கள் எல்லாம் உடனுக்குடன் நிரப்பப்பட்டு வருகின்றன.

கடந்த நான்கு ஆண்டுகளில் 6,772 மருத்துவர்கள், 461 இந்திய முறை மருத்துவர்கள், 7,242 செவிலியர்கள், 1,710 கிராம சுகாதார செவிலியர்கள், 971 சுகாதார ஆய்வாளர்கள், 8,433–க்கும் அதிகமான மருத்துவம் சார்ந்த பணியாளர்கள், தொகுப்பூதியத்தில் பணியாற்றி, காலமுறை ஊதியம் வழங்கப்பட்ட 1,249 மருத்துவர்கள், 5,059 செவிலியர்கள் என மொத்தம் 31 ஆயிரத்து 897 பேருக்கு இந்த அரசு தமிழகம் முழுவதிலும் உள்ள அரசு மருத்துவமனைகளில் நிரந்தர வேலைவாய்ப்புகளை வழங்கியுள்ளது.

இவர்கள் அல்லாமல், இந்த ஆண்டில் மேலும் நியமனம் செய்யப்படவுள்ள 3 ஆயிரத்து 536 மருத்துவம் சார்ந்த பணியாளர்களில்; தற்போது வேலை வாய்ப்பகப் பதிவு மூப்பு அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டுள்ள 659 மருந்தாளுநர்களுக்கும், 110 சுகாதார ஆய்வாளர்களுக்கும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தேர்வு செய்துள்ள 69 இந்தியமுறை மருத்துவர்களுக்கும், சேலம், திருச்சி, விழுப்புரம், திருவாரூர், திருநெல்வேலி, தருமபுரி ஆகிய மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், இராயப்பேட்டை, ஸ்டான்லி மருத்துவமனைகள் ஆகியவற்றிற்குத் தேர்வு செய்யப்பட்டுள்ள மருத்துவமனைப் பணியாளர்கள், செவிலியர் உதவியாளர்கள், பெருக்குநர்கள், ஆய்வக உதவியாளர்கள் போன்ற 301 அடிப்படை ஊழியர்களுக்கும், கடலூர், திருப்பூர், காஞ்சிபுரம், நாகர்கோவில்

ஆகிய நான்கு மாவட்டங்களின் அரசு மருத்துவமனைகளுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ள 49 அடிப்படைப் பணியாளர்களுக்கும், கருணை அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டுள்ள 10 பணியாளர்களுக்கும் என மொத்தம் 1,198 பேருக்கு உரிய பணி நியமன ஆணைகளை முதலமைச்சர் கலைஞர் இன்று (13.10.2010) வழங்கினார்.

சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் நடைபெற்ற இந்நிகழ்வின் போது, வேளாண்துறை அமைச்சர் திரு.வீரபாண்டி எஸ். ஆறுமுகம், சட்ட அமைச்சர் திரு.துரைமுருகன், மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், தலைமைச் செயலாளர் திருமதி எஸ். மாலதி, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை முதன்மைச் செயலாளர் திரு. வி.கு. சுப்புராஜ், இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதித் துறை இயக்குநர் திரு. இரமேஷ் குமார் கன்னா, பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்புத் துறை இயக்குநர் டாக்டர் ஆர்.டி.பொற்கை பாண்டியன், மருத்துவம் மற்றும் ஊரக நலத் துறை இயக்குநர் டாக்டர் என். இராஜா, மருத்துவக் கல்வி இயக்குநர் டாக்டர் வி. கனகசபை மற்றும் உயர் அலுவலர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.

* * *

வெளியீடு:–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9